கண்டிக்கக்கூடிய நடவடிக்கைகளில் நாமெல்லாம் தெளிவோடு ஒருமித்த வகையிலே, ஏகோபித்த வகையிலே ஈடுபடுவதற்கு இந்த அவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதை நான் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் நாட்டுப்புறக் கலைத் துறை தொடங்க வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) இல்லை, இல்லை. தீர்மானத்தில், தனித் தீர்மானத்தில் எல்லாம் இல்லை. விதி 110–ன்கீழான அறிவிப்புக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று கேட்டால் வாய்ப்புத் தருவேன். தனித் தீர்மானத்தில் இல்லை, உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் நாட்டுப்புறக் கலைத் துறை தொடங்க வேண்டியது"

2018 ஜூன் 26] [திரு. துரை. சந்திரசேகரன்]

குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:*

விவர அறிக்கை

கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம், தவில் மற்றும் நாதசுரம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், குரலிசை, வீணை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலைப் பட்டப் படிப்பும், இரண்டாண்டு முதுகலை பட்ட மேற்படிப்பும் மற்றும் ஓராண்டு இசை ஆசிரியர் இசை பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் மதுரை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் நாட்டுப்புறக் கலையில் மூன்றாண்டு பட்டயப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பாரம்பரிய தமிழ் பண்பாட்டினை இன்றளவும் பாதுகாத்து வெளிப்படுத்தும் ஒரு கருவியாக விளங்குவதோடு மட்டுமல்லாமல், ஓர் இனத்தின் சமூகப் பொருளாதார வாழ்வியல் சிந்தனைகளை சித்தரிப்பதில், நாட்டுப்புறக் கலைகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. பழம்பெரும் கலைக் களஞ்சியமாகத் திகழும் சோழமண்டல மக்களின் நாட்டுப்புறக் கலைகள் பன்முக சிறப்புகளைக் கொண்டவை. இத்தகைய சிறப்பு வாய்ந்த நாட்டுப்புறக் கலைகளின் களஞ்சியமாக விளங்கும் தஞ்சையிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள சிறந்த நாட்டுப்புறக் கலைஞர்கள் இக்கலைகளை இப்பகுதியிலேயே வளர்த்து வருகின்றனர்.

பழம்பெரும் கலையான தமிழக நாட்டுப்புறக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டும், நாட்டுப்புறக் கலைகளில் ஆர்வமுள்ள மாணாக்கர்களுக்கு அக்கலையை கற்பிக்கும் வகையிலும், திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் நாட்டுப்புறக் கலைக்கென ஒரு தனித் துறையைத் தோற்றுவிப்பது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

[2018 ஜூன் 26

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை முழுமையாகப் படித்தேன். அதில் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்தக் கல்லூரி வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லூரி. நாட்டுப்புறக் கலை என்பது குறிப்பாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகமாக உள்ளது. எனவே, திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் நாட்டுப்புறக் கலைத் துறை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்பு தரப்பட்டுள்ளது. 1965 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. வேதநாராயணன் அவர்கள், அரசு இசைக் கல்லூரியைத் தொடங்கினார்கள். அதற்குப் பிறகு 1973 ஆம் ஆண்டு தமிழ் பாடப் பிரிவு தொடங்கப்பட்டு, இந்த இசைக் கல்லூரி ஓர் இசைத் துறையாக மாற்றப்பட்டது. இந்நிலையில் எங்கள் தலைவர் முதலமைச்சராக இருக்கின்றபொழுது 21 ஏக்கர் நிலம் கொடுத்து, 1997 ஆம் ஆண்டு இசைத் துறைப் பிரிவை எடுத்து தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி என்று திருவையாறில் கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் வாழ்ந்து மறைந்த அந்தப் பகுதியை ஒட்டி காவேரிக் கரையின் தென்கரையில் அந்தக் கல்லூரியை அமைத்திருக்கிறார்கள். எங்களுடைய தலைவர் தொடங்கிவைத்து, அன்றைக்கு தமிழ்க்குடிமகனார் அவர்கள் திறந்துவைத்தார்கள். நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த விவர அறிக்கையில் எல்லாப் பாடப் பிரிவுகளும் சிறப்பாக இயங்கிவருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பாக அந்தக் கல்லூரிக்குச் சென்று ஆய்வு செய்து, அந்தக் கல்லூரி மாணவ–மாணவியரின் இசையைக் கேட்டு வந்திருக்கிறார். அந்தக் கல்லூரியைப் பார்வையிட்டு வந்திருக்கிறார். அங்கேகூட மாணவியர்களுக்கு விடுதிகள் இருக்கின்றன, மாணவர்களுக்கு விடுதி இல்லை என்று மாண்புமிகு அமைச்சரிடம் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, நாட்டுப்புறக் கலை என்பது மிக மிக அவசியமாக அந்தப் பகுதியில் தோற்றுவிக்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக இசைப் பிரிவும், நடனப் பிரிவும் தொடங்கப்பட வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். இரண்டு பிரிவுகளையும் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2018 ஜூன் 26]

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக அடுத்த academic year–ல் நாட்டுப்புற கலைப் பிரிவு அந்தக் கல்லூரியில் தொடங்கப்படும். இசை, நடனம் இரண்டிற்கும் 2 ஒளிவிடங்கள் உருவாக்கப்படும். அதைவிட முக்கியமான விஷயம், திருவையாறு இசைக் கல்லூரியை ஒரு Centre of Excellence in Arts ஆக உருமாற்றுவதற்காக, அந்த இடத்தில் ஓர் இசை அருங்காட்சியகம் அமைப்பதற்கு, மத்திய அரசாங்கத்திற்கு கருத்துருவை அனுப்பியிருக்கிறோம். கண்டிப்பாக அடுத்த வருடத்திற்குள்ளாக அங்கே அமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வோம். Backward Classes Department மூலமாக அந்த இடத்தில் ஒரு மாணவியர் விடுதி 50 மாணவிகளுக்காக இயங்கிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, வெளிநாட்டிலிருந்து மாணவர்கள் இப்போது வரத் தொடங்கியிருக்கிறார்கள். இலங்கை, மலேசியா மற்றும் ரங்கூன்–பர்மாவிலிருந்து வர ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு உதவும் வகையில் அந்த இடத்தில் ஒரு மாணவர் விடுதி, மாணவியர் விடுதி என இரண்டையும் தனித் தனியாக அமைப்பதற்கு Backward Classes Department உடன் பேசிக்கொண்டிருக்கிறோம். உன்னதமான இடம் இருக்கிறது. கண்டிப்பாக வரும் வருடத்தில் அது அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 55–ன்கீழ் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு) இசைக்கு விருப்பப்பட்டு நீங்கள் கேட்டதால் உங்களை அனுமதிக்கிறேன். அவருக்கு உள்ள கேள்வியை cut செய்துவிட்டு உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறேன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப்புறக் கலை வளர்ச்சிக்கெல்லாம் ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது நாட்டுப்புறப் பாடல்களுக்கு ஒரு புது மவுசு ஏற்பட்டிருக்கிறது. விஜய் டி.வி. சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் பாடுவதைப் பார்த்தால் அற்புதமான பாட்டுகள். அதில் நாட்டுப்புற பாடல்கள். இரவில் அதைக் கேட்டால்தான் நிம்மதியோடு தூங்கலாம் என்கின்ற அளவிற்கு நான் இரவில் பாட்டு கேட்காமல் தூங்கமாட்டேன். ஆகையால் அதுபோன்ற சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி நடத்துகின்ற விஜய் டி.வி. போன்ற மீடியாக்களுக்கு அரசு ஏதாவது உதவி செய்து அப்படிப்பட்ட கலையை வளர்ப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப்புறக் கலைஞர்களுக்காக வாரியம் அமைக்கப்பட்டு, 33,500 பேர்களுக்கு மேலே இப்போது அதில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சென்ற வருடம் மட்டுமே 7,000 பேர்களுக்கு மேலே பயனடைந்திருக்கிறார்கள். அதோடு முக்கியமான விஷயம், திருவையாறு இசைக் கல்லூரியில்தான் 12 பேர்* Ph.D. *படிப்பிற்கு* Registration *செய்திருக்கிறார்கள். அந்த இடத்தில் டி.வி. கோபாலகிருஷ்ணன் போன்ற உலகப் பிரசித்திபெற்ற இசைக் கலைஞர் அந்த கல்லூரியில்* Ph.D. *வாங்கி, இப்போது உலகத்திற்கே லயத்துவம் என்ற ஒரு புது இசை தத்துவத்தை தந்திருக்கிறார். அம்மா அரசின் கீழே ஒரு கல்லூரியிலிருந்து இசை தத்துவம் வருவது என்பது மீண்டும் நிகழத் தொடங்கியிருக்கிறது. நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இரவில் பாட்டு கேட்டால்தான் நல்ல தூக்கம் வரும் என்கின்றார்கள். இசையைப் போல இன்பம் உலகத்திலே கிடையாது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இதெல்லாம் வேண்டாம்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. ஜெயக்குமார் சொல்வதையெல்லாம் நான் பார்ப்பது இல்லை.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*